www.Padasalai.Net www.CBSEtips.in

# இரண்டாம் இடைப் பருவத் தேர்வு - 2023

**7 - வகுப்பு** **அறிவியல்**

நேரம் : 1.30 மணி மதிப்பெண்கள்: 30

**I. சரியான விடையைத் தேர்ந்தெடு:** **5×1=5**

1) பின்வருவனவற்றுள் ................ வெப்பம் கொள்வினையாகும்.
அ) குளிர்வடைதல் மற்றும் உருகுதல் ஆ) குளிர்வடைதல் மற்றும் உறைதல்
இ) ஆவியாதல் மற்றும் உருகுதல் ஈ) ஆவியாதல் மற்றும் உறைதல்

2) கீழ்காண்பனவற்றில் ................ வேதியியல் மாற்றமாகும்.
அ) நீர் மேகங்களாவது ஆ) ஒரு மரத்தின் வளர்ச்சி
இ) பசுஞ்சாணம் உயிர்-எரிவாயுவாவது ஈ) பனிக்கூழ் கரைந்த நிலை - பனிக்கூழாவது

3) செல்லின் மூளையாகச் செயல்படும் செல்லின் பாகம் எது?
அ) லைசோசோம் ஆ) ரைபோசோம் இ) மைட்டோகாண்ட்ரியா ஈ) உட்கரு

4) மனிதனின் சராசரி உடல் வெப்பநிலை ................
அ) $0^oC$ ஆ) $37^oC$ இ) $98^oC$ ஈ) $100^oC$

5) சிறிய அளவிலான மின்னோட்டங்கள் மில்லி ஆம்பியரில் (mA) அளக்கப்படுகிறது எனில் 0.25 ஆம்பியர் (A) மின்னோட்டத்தினை மில்லி ஆம்பியரில் கூறுக.
அ) 2.5 mA ஆ) 25 mA இ) 250 mA ஈ) 2500 mA

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக:** **2×1=2**

6) அறை வெப்பநிலையில் பாதரசம் ................ நிலையில் காணப்படுகிறது.

7) முதிர்ந்த இரத்தச் சிவப்பு செல்லில் ................ இல்லை.

**III. சரியா, தவறா? தவறெனில் திருத்தி எழுதுக:** **3×1=3**

8) வெள்ளி நகையின் நிறம் மங்குதல் என்ற நிகழ்வு வெப்பஏற்பு மாற்றமாகும்.

9) வீடுகளில் உள்ள மின் இணைப்பில், அதிக மின் பளு இருந்தால் மின் உருகு இழை உருகாது.

10) தாவர செல்களில் மட்டுமே பசுங்கணிகங்கள் உள்ளன.

**IV. பொருத்துக:** **5×1=5**

| | | |
|---|---|---|
| 11) உருகுதல் | - | உட்கரு |
| 12) தற்கொலைப்பை | - | பனிக்கட்டி நீராதல் |
| 13) உறைதல் | - | லைசோசோம் |
| 14) ஆற்றல் மையம் | - | பனிக்கட்டி உருவாவது |
| 15) கட்டுப்பாட்டு அறை | - | மைட்டோகாண்ட்ரியா |

**V. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளி:** **5×2=10**

16) இயற்பியல் மற்றும் வேதியியல் மாற்றங்கள் வேறுபடுத்துக.

17) இரு வெப்ப உமிழ் வினைகளைக் குறிப்பிடுக.

18) மின்கலம் என்பது என்ன?

19) மின்கடத்துதிறனை வரையறு.

20) லைசோசோம், செல்களில் துப்புரவாளர்கள் என ஏன் அழைக்கப்படுகின்றன?

21) வைரஸ் செல்லற்றவை என அழைக்கப்படுகிறது? ஏன்?

22) வெப்பநிலைமானிகளில் நாம் ஏன் பாதரசத்தினை பயன்படுத்துகிறோம்?

23) ஸ்ரீநகரின் வெப்பநிலை $-4^oC$ மேலும் கொடைக்கானலின் வெப்பநிலை $3^oC$. இவற்றில் எப்பகுதியின் வெப்பநிலை அதிகமாகும். அப்பகுதிகளுக்கிடையே காணப்படும் வெப்பநிலை வேறுபாடு எவ்வளவு?

**VI. விரிவாக விடையளி:** **1×5=5**

24) a) ஆய்வக வெப்பநிலைமானிக்கும் மருத்துவ வெப்பநிலைமானிக்கும் உள்ள ஒற்றுமைகள் மற்றும் வேற்றுமைகள் யாவை? **(அல்லது)**

b) தாவர செல் மற்றும் விலங்கு செல் ஒப்பிடுக.

CamScanner
Kindly send me your answer keys to padasalai.net@gmail.com